**அனுப்புநர்**

சா. சேதுராமவர்மா,

அரசுத் தேர்வுகள் இயக்குநர்,

சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி

அலுவலர்கள் மற்றும்

இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி.

**ந.க.எண். 020846 /எப்1/2022** **நாள். 24 .01.2023**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 - மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2023 – பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் - அறிவுரை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை :**
1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:08.12.2022.
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட கடிதங்கள், நாள்.23.12.2022 மற்றும் 06.01.2023

------

பார்வை 1-ல் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளில், மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் 14.12.2022 **முதல்** 23.12.2022 வரையிலான நாட்களில் தங்களது பள்ளியில் +1 பயிலும் அனைத்து மாணாக்கர்களது விவரங்களையும் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து, தேர்வுக் கட்டணத்தினையும் இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர், பார்வை 2-ல் காணும் இவ்வலுவலகக் கடிதங்களில் மேற்குறிப்பிட்ட பணிக்கான கால அளவு 28.12.2022 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது.

தற்போது, முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் 24.01.2023 **பிற்பகல் முதல் பிப்ரவரி முதல் வாரம் வரையிலான நாட்களில்** www.dge1.tn.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி மார்ச்/ஏப்ரல் 2023 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான தங்கள் பள்ளி மாணாக்கர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அவ்வாறு, பதிவிறக்கம் செய்யப்படும் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் அத்திருத்தங்களை மேற்கொள்ள பின்னர் வாய்ப்பு வழங்கப்படும் என்ற விவரத்தினையும் அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தெரிவித்திடுமாறும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/-**

**இயக்குநர்**

<u>நகல்:</u>

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்